www.Padasalai.Net www.TrbTnpsc.com

B

KANCHIPURAM DT

# அரையாண்டு பொதுத்தேர்வு - 2023

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி  மதிப்பெண்கள் : 90

பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.  20 x 1 = 20

1. நிதிநிலை கணக்கின் அடிப்படையாக விளங்குவது
   அ) சமூகக் கணக்கியல்  ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்
   இ) மேலாண்மைக் கணக்கியல்  ஈ) பொறுப்பு கணக்கியல்
2. இறுதி சரக்கிருப்பு, அடக்கவிலை அல்லது விற்று ஈட்டக்கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதனடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் கோட்பாடு
   அ) முக்கியத்துவ மரபு  ஆ) பண மதிப்பீட்டுக் கருத்து
   இ) முன்னெச்சரிக்கை மரபு  ஈ) நிகழ்வுத் தீர்வு கருத்து
3. இரட்டைப்பதிவு முறையில் கணக்குகளைப் பதிவு செய்யும்போது நடவடிக்கைகள் பாதிப்பது
   அ) குறைந்த பட்சம் இரண்டு கணக்குகள்  ஆ) ஒரே கணக்கில், வெவ்வேறு தேதிகளில்
   இ) ஒரே கணக்கின் இரு பக்கங்களில்  ஈ) குறைந்தபட்சம் மூன்று கணக்குகள்
4. நடவடிக்கைகள் _______ உதவியுடன் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகின்றன.
   அ) குறிப்பேடு  ஆ) ஆதார ஆவணங்கள்
   இ) இருப்பாய்வு  ஈ) பேரேடு
5. பற்று மற்றும் வரவு இனங்களைக் குறிப்பேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளில் எடுத்து எழுதும் நடைமுறையை _______ என அழைக்கலாம்.
   அ) கூட்டுதல்  ஆ) எடுத்தெழுதுதல்
   இ) குறிப்பேட்டில் பதிதல்  ஈ) இருப்பு கட்டுதல்
6. பின்வருவனவற்றுள் எது கணக்கியலின் முதன்மை நோக்கம் ஆகாது?
   அ) நிறுவனத்தின் நிதிநிலையை அறிந்துகொள்ளுதல்
   ஆ) நடவடிக்கைகளை முறையாகப் பதிவு செய்தல்
   இ) வரி விதிக்கும் அதிகாரிகளிடம் வரித்தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்
   ஈ) வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறனை அறிந்துகொள்ளுதல்
7. திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள் _______க்கு ஏற்றவை.
   அ) பெரிய, நடுத்தர வணிகம்  ஆ) பெரிய, தனித்தன்மையான வணிகம்
   இ) சிறிய, பாரம்பரிய வணிகம்  ஈ) மேலே கூறிய எதுவுமில்லை
8. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது
   அ) ஒரு குறிப்பிட்ட நாளில்  ஆ) ஒரு ஆண்டிற்கு
   இ) ஆண்டு இறுதியில்  ஈ) இவை ஏதும் இல்லை
9. புதிதாக நிறுவப்பட்ட இயந்திரத்தினைச் சோதனை ஓட்டம் மேற்கொள்வதற்கு செய்த செலவு ₹20,000 என்பது
   அ) முதலினச் செலவு  ஆ) தொடக்கச் செலவு
   இ) நீள்பயன் வருவாயினச் செலவு  ஈ) வருவாயினச் செலவு
10. ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகளை ரொக்க ஏட்டில் பதிந்தால் அது
   அ) கூட்டுப் பதிவு  ஆ) ஒற்றைப் பதிவு  இ) எதிர்ப் பதிவு  ஈ) சாதாரணப் பதிவு
11. GAAP என்பது
   அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள்
   ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
   இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்
   ஈ) இவற்றுள் ஏதுமில்லை

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



12. ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்
அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு
இ) இருப்பு இன்மை ஈ) பற்றும் மற்றும் வரவு இருப்பு

13. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?
அ) ஆள்சார் கணக்குகள் மட்டும் ஆ) சொத்துக் கணக்குகள் மட்டும்
இ) பெயரளவு கணக்குகள் மட்டும் ஈ) அனைத்து கணக்குகளும்

14. கொள்முதல் ஏட்டில் பதிவு செய்வது
அ) அனைத்து சரக்குகளின் கொள்முதல் ஆ) அனைத்து சொத்துகளின் கடன் கொள்முதல்
இ) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல்
ஈ) அனைத்து சொத்துகளின் கொள்முதல்

15. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது
அ) வங்கி அறிக்கை ஆ) ரொக்க ஏடு
இ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கிப் பத்தி
ஈ) சில்லறை ரொக்க ஏடு

16. இருப்பாய்வின் வேறுபாடு எடுத்துச் செல்லப்படுவது
அ) முதல் கணக்கிற்கு ஆ) வியாபார கணக்கிற்கு
இ) அனாமத்துக் கணக்கிற்கு ஈ) இலாப நட்டக் கணக்கிற்கு

17. ஒரு சொத்து எதன் காரணமாக வழக்கொழிவு அடைகிறது?
அ) காலப்போக்கு ஆ) தேய்வு மற்றும் உராய்வு
இ) தொழில்நுட்ப மாற்றங்கள் ஈ) மேற்கூறியவற்றில் ஏதுமில்லை

18. இருப்புநிலைக் குறிப்பு என்பது ______.
அ) ஓர் கணக்கு ஆ) ஓர் அறிக்கை
இ) ஓர் அறிக்கையுமில்லை, ஓர் கணக்குமில்லை
ஈ) மேற்கூறியவற்றில் எதுவும் இல்லை

19. வங்கி மேல்வரைப் பற்று எதில் காண்பிக்கப்படும்?
அ) வியாபாரக் கணக்கில் ஆ) இலாப நட்டக் கணக்கில்
இ) கடன் பக்கத்தில் ஈ) சொத்து பக்கத்தில்

20. முன்கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் தோன்றுவது
அ) வியாபாரக் கணக்கில் பற்றுப்பக்கம் ஆ) இலாப நட்டக் கணக்கில் வரவுப் பக்கம்
இ) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம்
ஈ) இருப்புநிலைக்குறிப்பின் பொறுப்புகள் பக்கம்

## பகுதி - ஆ

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா)** **7 x 2 = 14**

21. கணக்கியலின் ஏதேனும் இரண்டு பணிகளைக் கூறுக.

22. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.

23. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| a) | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
| | 10,000 | = | 8,000 | + | ? |
| b) | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
| | 20,000 | = | ? | + | 4,000 |

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

24. எடுத்தெழுதுதல் என்றால் என்ன?
25. கணினிமயக் கணக்கியல் முறை என்றால் என்ன?
26. இருப்பாய்வு தயாரிக்கப்பட வேண்டி உள்ளது எனக் கருதி கீழ்க்கண்ட பிழைகளைத் திருத்தம் செய்யவும்.
   அ) விற்பனை ஏட்டில் ₹400 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது
   ஆ) விற்பனை திருப்ப ஏட்டில் ₹500 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது
   இ) கொள்முதல் ஏட்டில் ₹600 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது
   ஈ) கொள்முதல் திருப்ப ஏட்டில் ₹700 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
27. ஒரு நிறுவனம் ₹40,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. நிறுவுதல் செலவாக ₹2,000 மேற்கொண்டது. இயந்திரத்தின் எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் 5 ஆண்டுகள். நேர்கோட்டு முறையில் ஆண்டு தேய்மானத் தொகையைக் கணக்கிடுக.
28. பின்வரும் செலவுகள் முதலினமா அல்லது வருவாயினமா எனக் கூறுக.
   i) கட்டடம் கட்டியதற்கான தொகை ₹5,00,000
   ii) அறைகலன் பழுதுபார்த்தது ₹25,000
29. ராஜு என்பாரது ஏடுகளில் 31 டிசம்பர் 2019 ஆம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 570 |
| விற்பனை | 26,200 |
| விற்பனைத் திருப்பம் | 60 |
| கொள்முதல் | 15,800 |
| கொள்முதல் திருப்பம் | 90 |
| இறுதி சரக்கிருப்பு | 860 |

30. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளில் விடுபட்ட தகவல்களை நிரப்புக.

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| 2020 ஏப்ரல் 1 | ________ ப<br>ரவி முதல் க/கு<br>(ரவி ரொக்கத்துடன் வியாபாரம் தொடங்கியது) | | 15,000 | 15,000 |
| ஏப்ரல் 10 | ________ ப<br>ரொக்க க/கு<br>(வங்கியில் பணம் செலுத்தியது) | | 5,000 | 5,000 |

பகுதி - இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21

31. கணக்கியல் தகவல்களில் பின்வரும் பயனீட்டாளர்கள் ஏன் ஆர்வமாக உள்ளனர்?
   அ) முதலீட்டாளர்கள் அ) அரசு
32. 'பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும்' - விவரி.
33. இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.
34. கீழ்க்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் இடம்பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டிடுக.
   1) விற்பனை 2) கொள்முதல் 3) முதல் 4) எடுப்புகள்
   5) விற்பனைத் திருப்பம் 6) கொள்முதல் திருப்பம்

www.Padasalai.Net www.TrbTnpsc.com



35. பின்வரும் நடவடிக்கைகளை மோகன் & கோ நிறுவனத்தின் விற்பனை ஏட்டில் பதிக.

2017

ஆகஸ்டு 1 இடாப்பு எண்.68ன் படி செந்திலுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ரூ.23,000

ஆகஸ்டு 4 இடாப்பு எண்.74 ன்படி மணி என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது ரூ.10,500

ஆகஸ்டு 8 சுரேஷ் என்பவருக்கு ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ரூ.6,500

ஆகஸ்டு 25 கமலா என்பவருக்கு கடனுக்கு விற்றது

10 மேசைகள் ஒன்று ரூ.1,500 வீதம்

20 நாற்காலிகள் ஒன்று ரூ.200 வீதம்

36. நிலைச் சொத்து ₹50,000 க்கு வாங்கப்பட்டது. தேய்மான விகிதம் ஆண்டுக்கு 15% குறைந்து செல் இருப்பு முறையில் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு தேய்மானத் தொகை கணக்கிடவும்.

37. பின்வரும் விவரங்களிலிருந்து ஜெயக்குமார் என்பவரின் 2016 டிசம்பர் 31-ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயார் செய்க.

அ) ரொக்க ஏட்டின்படி இருப்பு ₹7,130

ஆ) செலுத்திய காசோலை வசூலாகாதது ₹1,000

இ) வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது ₹800

38. பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக.

1) முதல் 2) கட்டடம் 3) உள் ஏற்றிச்செல் செலவு

4) ரொக்கம் 5) கழிவு பெற்றது 6) வங்கி

39. சிறுகுறிப்பு வரைக :

அ) வன்பொருள் ஆ) மென்பொருள்

40. அறைகலன் வியாபாரம் செய்யும் நிறுவனமானது தனது பயன்படுத்தப்படாத நிலத்தினை விற்று தொகையினைப் பெற்றுக்கொண்டது.

i) இதனை வழக்கமான விற்பனையாகக் கருதலாமா?

ii) இந்நடவடிக்கை முதலினமா / வருவாயினமா என வகைப்படுத்தி விவரி.

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

41. அ) பின்வரும் நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டுப் பதிவு தருக.

| 2019 | | | ₹ |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | ரிஷி ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 50,000 |
| | 2 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 4,000 |
| | 3 | இரவியிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 10000 |
| | 4 | இரவிக்கு ரொக்கம் செலுத்தியது | 7,000 |
| | 5 | சொந்த பயனுக்காக ரொக்கம் எடுத்தது | 6,000 |
| | 6 | வங்கியில் செலுத்திய ரொக்கம் | 2,000 |
| | 7 | காசோலை மூலம் சம்பளம் வழங்கியது | 3,000 |
| | 8 | மதுவிற்கு கடனாக சரக்கு விற்றது | 9,000 |
| | 9 | வங்கியிலிருந்து கடன் பெற்றது | 10,000 |
| | 10 | கழிவு ரொக்கமாக பெற்றது | 1,000 |

*(அல்லது)*

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



ஆ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு கணக்கியல் சமன்பாட்டினைத் தயார் செய்க.

| | | ₹ |
|---|---|---|
| i) | இராஜா ரொக்கத்துடன் தொழில் தொடங்கினார் | 40,000 |
| ii) | வங்கியில் வைப்புத் தொகையுடன் கணக்குத் தொடங்கியது | 30,000 |
| iii) | ஹரி என்பவரிடம் கடனுக்கு சரக்கு வாங்கியது | 12,000 |
| iv) | முருகன் என்பவருக்கு ₹5,500 மதிப்புள்ள சரக்கு விற்கப்பட்டு ரொக்கம் பெற்றது | 6,500 |
| v) | இணைய வங்கி மூலமாக மின்கட்டணம் செலுத்தியது | 500 |

42. அ) பின்வரும் விவரங்களிலிருந்து ஆனந்த் என்பவரின் கணக்கைத் தயாரிக்கவும்.

2017

| | | |
|---|---|---|
| ஜுலை 1 | ஆனந்த் கணக்கின் வரவு இருப்பு | 4,000 |
| 15 | ஆனந்துக்கு ரொக்கம் செலுத்தியது | 2,000 |
| 18 | ஆனந்திடமிருந்து கடனாகக் கொள்முதல் செய்தது | 8,000 |
| 20 | ஆனந்துக்கு ரொக்கம் செலுத்தியது | 3,960 |
| | அவர் அளித்த தள்ளுபடி | 40 |
| 25 | ஆனந்திடமிருந்து கடனுக்கு கொள்முதல் செய்தது | 5,000 |

*(அல்லது)*

ஆ) குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

43. அ) மோட்டார் வாகனப் பொருட்களை விற்பனை செய்யும் ராஜு என்பவரது ஏடுகளிலிருந்து 2017 மார்ச் 31 ஆம் நாளன்று எடுக்கப்பட்ட கணக்குகளின் பின்வரும் இருப்புகளிலிருந்து இருப்பாய்வு தயாரிக்கவும்.

| *விவரம்* | ₹ | *விவரம்* | ₹ |
|---|---|---|---|
| கை ரொக்கம் | 5,500 | நேரடிச் செலவுகள் | 5,000 |
| பெற்ற தள்ளுபடி | 300 | வெளிதூக்கு கூலி | 3,500 |
| கடனீந்தோர் | 15,000 | முதல் | 45,000 |
| கட்டடம் | 50,000 | கொள்முதல் | 49,700 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 6,000 | விற்பனை | 59,400 |

*(அல்லது)*

ஆ) 2018 மார்ச் 31ஆம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலைத் தயார் செய்து, ரொக்க ஏட்டின் படியான இருப்பினைக் கண்டறிக.

| | *விவரம்* | ₹ |
|---|---|---|
| i) | வங்கி அறிக்கையின்படியான வங்கி இருப்பு | 15,000 |
| ii) | விடுத்த காசோலை இன்னும் செலுத்துவதற்கு முன்னிலைப்படுத்தப்படாதது | 2,500 |
| iii) | வங்கிக் கட்டணம் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை | 250 |
| iv) | வங்கியால் பற்று செய்யப்பட்ட வட்டி ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை | 500 |
| v) | செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது | 900 |

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



44. அ) பின்வரும் விவரங்களிலிருந்து நாலந்தா புத்தகக்கடையின் துணை ஏடுகளை தயார் செய்யவும்.

2017

டிசம்பர் 1 உமாதேவியிடமிருந்து கடனுக்கு வாங்கியது
ஒன்று ரூ.80 வீதம் 100 வணிகப்புள்ளியியல் புத்தகங்கள்
ஒன்று ரூ.150 வீதம் 100 கணக்குப்பதிவியல் புத்தகங்கள்

டிசம்பர் 7 ஸ்ரீதேவியிடம் கடனுக்கு விற்றது
ஒன்று ரூ.90 வீதம் 240 வணிகப் புள்ளியியல் புத்தகங்கள்
ஒன்று ரூ.170 வீதம் 250 கணக்குப்பதிவியல் புத்தகங்கள்

டிசம்பர் 10 சுபாவிடமிருந்து வாங்கியது
ஒன்று ரூ.80 வீதம் 40 பொருளாதாரப் புத்தகங்கள்
கழிக்க : வியாபாரத் தள்ளுபடி 15%

டிசம்பர் 15 சேதமடைந்திருந்த 10 கணக்குப்பதிவியல் புத்தகங்களை உமாதேவியிடம் திருப்பி, இதற்கு பணம் பெறப்படவில்லை.

டிசம்பர் 18 குப்தாவிற்கு கடனுக்கு விற்றது
ஒன்று ரூ.95 வீதம் 200 பொருளாதாரப் புத்தகங்கள்

டிசம்பர் 26 சுபாவிற்கு 6 பொருளாதார புத்தகங்கள் திருப்பி அனுப்பப்பட்டன.

*(அல்லது)*

ஆ) பின்வரும் நடவடிக்கைகளை குணால் என்பவரின் தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

2018

| | | | |
|---|---|---|---|
| ஏப்ரல் | 1 | கையிருப்பு ரொக்கம் | 11,200 |
| | 5 | இரமேஷ் என்பவரிடமிருந்து பெற்றது | 3,000 |
| | 7 | கூலி செலுத்தியது | 300 |
| | 8 | ரொக்கத்திற்கு சரக்குகளை விற்றது | 8,000 |
| | 10 | மோகனுக்கு செலுத்தியது | 700 |
| | 27 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 2,000 |
| | 30 | பங்காதாயம் பெற்றது | 1,200 |
| | 31 | சம்பளம் கொடுத்தது | 2,500 |

45. அ) தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

*(அல்லது)*

ஆ) கீழ்கண்டவற்றை முதலினம் அல்லது வருவாயினம் என வகைப்படுத்தவும்.

i) தணிக்கை கட்டணம் செலுத்தியது ₹10,000
ii) தொழிலாளர் நலனுக்காகச் செய்த செலவு ₹5,000
iii) நிறுவன வாகனத்தின் மீதான பராமரிப்புச் செலவு ₹2,000
iv) பழைய.இயந்திரம் வாங்கி பழுதுபார்த்தச் செலவு ₹3,000
v) ஆலை வாடகைச் செலுத்தியது ₹12,000

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

46. அ) கணேஷ் என்பவரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து வியாபார இலாப நட்டக் கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| சரக்கிருப்பு (1.1.2017) | 8,000 | வாராக்கடன் | 1,200 |
| கொள்முதல் | 22,000 | வியாபாரச் செலவுகள் | 1,200 |
| விற்பனை | 42,000 | அளித்த தள்ளுபடி | 600 |
| கொள்முதல் மீதான செலவுகள் | 2,500 | கழிவு கொடுத்தது | 1,100 |
| நிதிசார் செலவுகள் செலுத்தியது | 3,500 | விற்பனைச் செலவுகள் | 600 |
| விற்பனை மீதான செலவுகள் | 1,000 | அலுவலக வாகனங்கள் மீதான பழுதுபார்ப்புச் செலவுகள் | 600 |

(அல்லது)

ஆ) கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகளில் ஏதேனும் ஐந்தினைத் தருக.

47. அ) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து குமார் அவர்களின் 2017 டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார, இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| பற்று இருப்பு தொகை | ₹ | வரவு இருப்பு தொகை | ₹ |
|---|---|---|---|
| கொள்முதல் | 14,500 | விற்பனை | 20,500 |
| உள்தூக்கு கூலி | 750 | பெற்ற வாடகை | 2,500 |
| விளம்பரம் | 500 | கடனீந்தோர் | 2,000 |
| வெளிதூக்கு கூலி | 400 | முதல் | 5,000 |
| வங்கி | 1,500 | | |
| அறைகலன் | 8,000 | | |
| கடனாளிகள் | 2,850 | | |
| சரக்கிருப்பு 1.1.2017 | 1,500 | | |
| | **30,000** | | **30,000** |

*சரிக்கட்டுதல்கள் :*

i) இறுதி சரக்கிருப்பு ₹3,900

ii) முன்கூட்டிச் செலுத்திய உள்தூக்குக் கூலி ₹250

iii) முன்கூட்டிப் பெற்ற வாடகை ₹100

(அல்லது)

ஆ) சுதா நிறுமம், ஏப்ரல் 1, 2010 அன்று ₹4,50,000 மதிப்புள்ள இயந்திரம் வாங்கி, நிறுவுதல் செலவாக ₹50,000 செலவு செய்தது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்திய பிறகு அந்த இயந்திரம் ₹3,85,000 க்கு விற்கப்பட்டது. தேய்மானம் ஆண்டுதோறும் 10% நேர்க்கோட்டு முறையில் நீக்கப்படவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் மார்ச் 31 இல முடிக்கப்படுகின்றன. இயந்திரக் கணக்கினைத் தயாரிக்கவும்.

******

காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்டங்கள்

**அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023**

## 11 - ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல் - விடைக் குறிப்பு

| சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். | | 20 X 1 = 20 |
|---|---|---|
| 1 | ஆ | காரியதரிசிகளின் கணக்கியல் |
| 2 | இ | முன்னெச்சரிக்கை மரபு |
| 3 | அ | குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள் |
| 4 | ஆ | அதார ஆவணங்கள் |
| 5 | ஆ | எடுத்தெழுதல் |
| 6 | இ | வரி விதிக்கும் அதிகாரிகளிடம் வரித்தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல் |
| 7 | அ | பெரிய, நடுத்தர வணிகம் |
| 8 | அ | ஒரு குறிப்பிட்ட நாளில் |
| 9 | அ | முதலினச் செலவு |
| 10 | இ | எதிர்ப் பதிவு |
| 11 | ஆ | பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள் |
| 12 | ஆ | பற்று இருப்பு |
| 13 | ஈ | அனைத்து கணக்குகளும் |
| 14 | இ | அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல் |
| 15 | இ | வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கிப் பத்தி |
| 16 | இ | அனாமத்துக் கணக்கிற்கு |
| 17 | இ | தொழில்நுட்ப மாற்றங்கள் |
| 18 | ஆ | ஓர் அறிக்கை |
| 19 | இ | கடன் பக்கத்தில் |
| 20 | இ | இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம் |

### பகுதி - II

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

21. **கணக்கியலின் ஏதேனும் இரண்டு பணிகளைக் கூறுக.**

i) அளவிடுதல்

- வணிக நடவடிக்கைகள் குறித்து முறையான ஆவணங்களை வைத்திருத்தல், பதிவு செய்தல், எடுத்தெழுதுதல், கடைசியாக இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல் ஆகியவையே கணக்கியலின் முதன்மையான பணியாகும்.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

ii) முன்னறிதல்

- வணிக நிறுவனங்களின் எதிர்கால செயல் திறன் மற்றும் நிதிநிலை பற்றி கணக்கியலின் பல்வேறு கருவிகளின் மூலம் முன்கூட்டியே அறிந்து கொள்ளுதல்.

iii) ஒப்பிடுதல்

- கணக்கியல், நிகழ்ந்த செயல் திறனுடன், திட்டமிட்ட செயல் திறனை ஒப்பிட உதவுகிறது.

22. **கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.**

- ஜே.ஆர். பேட்லிபாய் அவர்களின் கூற்றுப்படி, "கணக்கு ஏடுகள் பராமரிப்பு என்பது, வணிக நடவடிக்கைகளை ஏடுகளில் பதிவு செய்யும் ஒரு கலையாகும்".

( அல்லது )

- ஆர்.என். கார்ட்டர் அவர்களின் கூற்றுப்படி, "கணக்கேடுகள் பராமரிப்பு என்பது , பணம் அல்லது பணத்தின் மதிப்பிலுள்ள அனைத்து வணிக நடவடிக்கைகளையும் கணக்கேடுகளில் சரியாக பதிவு செய்யும் கலை மற்றும் அறிவியல் ஆகும்."

23.

(அ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்

₹.10,000 = ₹.8,000 + ₹. 2,000

(ஆ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்

₹.20,000 = ₹.16,000 + ₹. 40,000

24. **எடுத்தெழுதுதல் என்றால் என்ன?**

- குறிப்பேட்டில் பதிவாகி உள்ள நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவு இனங்களை பேரேட்டில் உள்ள கணக்குகளுக்கு மாற்றம் செய்வது எடுத்தெழுதுதல் எனப்படும்.

25. **கணினிமயக் கணக்கியல் முறை என்றால் என்ன?**

- கணினிமயக் கணக்கியல் முறை என்பது, கணினியைப் பயன்படுத்தி கணக்குகளைப் பராமரிக்கும் முறை ஆகும்.

26. (அ) விற்பனை கணக்கில் ₹. 400 **வரவு** வைக்க வேண்டும்.

(ஆ) விற்பனைத் திருப்ப கணக்கில் ₹. 500 **வரவு** வைக்க வேண்டும்.

(இ) கொள்முதல் கணக்கில் ₹. 600 **பற்று** வைக்க வேண்டும்.

(ஈ) கொள்முதல் திருப்ப கணக்கில் ₹. 700 **பற்று** வைக்க வேண்டும்

27. சொத்தின் ஆரம்ப அடக்கவிலை = வாங்கிய விலை + நிறுவகைச் செலவுகள்

= ₹. 40,000 + ₹. 2,000 = ₹. 42,000

$$\text{ஆண்டு தேய்மானத் தொகை} = \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்க விலை} - \text{எதிர்நோக்கும் இறுதி மதிப்பு}}{\text{எதிர்நோக்கும் பயனளிப்பு காலம்}}$$

$$= \frac{42{,}000-0}{5} = \frac{42{,}000}{5} = ₹.\ 8{,}400$$

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

28.

| நடவடிக்கை | வகைகள் |
|---|---|
| (i) கட்டடம் கட்டியதற்கான தொகை ₹ .5,00,000. | முதலினச் செலவு |
| (ii) அறைகலன் பழுதுபார்த்தது ₹. 25,000. | வருவாயினச் செலவு |

29. ப ராஜூ ஏடுகளில் 31, டிசம்பர் 2019 ம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கு வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | | 570 | விற்பனை | 26,200 | |
| கொள்முதல் | 15,800 | | கழிக்க : விற்பனை திருப்பம் | 60 | 26,140 |
| கழிக்க: கொள்முதல் திருப்பம் | 90 | 15,710 | | | |
| மொத்த இலாபம் கீ/இ | | 10,720 | இறுதி சரக்கிருப்பு | | 860 |
| | | 27,000 | | | 27,000 |

30. குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2020 எப்ரல்1 | ரொக்க க/கு ப<br>ரவி முதல் க/கு<br>( ரவி ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 1,50,000 | 1,50,000 |
| எப்ரல்10 | வங்கி க/கு ப<br>ரொக்க க/கு<br>( வங்கியில் பணம் செலுத்தியது ) | | 50,000 | 50,000 |

## பகுதி - III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. கணக்கியல் தகவல்களில் பின்வரும் பயனீட்டாளர்கள் ஏன் ஆர்வமாக உள்ளனர்?

(அ) முதலீட்டாளர்கள் (ஆ) அரசு

அ. முதலீட்டாளர்கள்

- ஒரு நிறுவனத்தில், தங்களது நிதியை முதலீடு செய்யும் ஆர்வமுள்ளவர்கள் முதலீட்டாளர்கள்
- தாங்கள் இடும் முதல், இலாபகரமாக தங்களது கைக்கு திரும்ப வரவேண்டும் என நினைப்பது முதலீட்டாளர்களின் இயல்பே.
- எனவே, நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ளவும், எதிர்கால இலாபம் மற்றும் இடர் ஏற்கும் திறன் போன்றவற்றை தெரிந்து கொள்ளவும் அதிக ஆர்வம் கொண்டிருப்பர்.



ஆ. அரசு

- வணிக நிறுவனங்கள், நாட்டின் அரிதான வளங்களைப் பயன்படுத்துகின்றன.
- அரசாங்கம் , வணிக நிறுவனங்களின் செயல் திறனை அறிந்து வைத்திருந்தால் மட்டுமே, அரிதான வளங்களை ஒதுக்கீடு செய்தல், வணிகம் மற்றும் தொழில் துறை சார்ந்த கொள்கை முடிவுகளை உருவாக்குதல், மானியம் மற்றும் சலுகைகள் வழங்குதல் போன்றவற்றிற்கான முடிவுகளை எடுக்க முடியும்.
- மேற்கண்ட காரணத்தாலேயே, அரசு கணக்கியல் தகவல்களில் அதிகம் ஆர்வம் காட்டுகின்றது.

32. 'பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும்' – விவரி.

- பணமதிப்பீட்டுக் கருத்தின்படி, எந்த நடவடிக்கைகளைப் பணத்தால் அளவிடமுடியுமோ, அந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்குகளில் பதியப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது.
- பணமானது, பரிமாற்றத்தின் ஊடகமாக விளங்குவதால், பணத்தால் அளவிடக்கூடிய நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன.
- பணம் ஒரு பொதுவான அளவீடாக இருப்பதால், பலதரப்பட்ட வணிக விவரங்களை அதன் மூலம் பதிவு செய்ய முடிகிறது.

33. இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

| | | |
|---|---|---|
| ஆள்சார் கணக்கு | பெறுபவரை பற்று செய்க | தருபவரை வரவு செய்க |
| சொத்து கணக்கு | உள்வருவதை பற்று செய்க | வெளிச் செல்வரை வரவு செய்க |
| பெயரளவு கணக்கு | அனைத்துச் செலவுகளையும், நட்டங்களையும் பற்று செய்க | அனைத்து வருமானங்களையும், ஆதாயங்களையும் வரவு செய்க |

34.

1) விற்பனை - வரவு
2) கொள்முதல் - பற்று
3) முதல் - வரவு
4) எடுப்புகள் - பற்று
5) விற்பனைத் திருப்பம் - பற்று
6) கொள்முதல் திருப்பம் - வரவு

35. மோகன்& கோ நிறுவனத்தின் ஏடுகளில் விற்பனை ஏடு

| நாள் | விவரம் | வெளிச்செல் இடாப்பு எண் | பே.ப.எ | தொகை விளக்கம் ₹. | தொகை மொத்தம் ₹. |
|---|---|---|---|---|---|
| 2017 ஆகஸ்டு1 | செந்தில் | 68 | | | 23,000 |
| 4 | மணி | 74 | | | 10,500 |
| | விற்பனை க/கு வ | | | | 33,500 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net

36.

**தேய்மானத் தொகை காணல்**

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| நிலைச்சொத்தின் மதிப்பு | 50,000 |
| கழிக்க : முதல் ஆண்டு தேய்மானம் ( 50,000 x 15/100 ) | 7,500 |
| | 42,500 |
| கழிக்க : இரண்டாம் ஆண்டு தேய்மானம் ( 42,500 x 15/100 ) | 6,375 |
| சொத்தின் ஏட்டு மதிப்பு | 36,125 |

∴முதல் ஆண்டு தேய்மானம் ₹. 7,500
இரண்டாம் ஆண்டு தேய்மானம் ₹. 6,375

37. **திரு. ஜெயக்குமார் என்பரது ஏடுகளில் 31.12.2016 ஆம் நாளுக்குரிய வங்கி சரிகட்டும் பட்டியல்**

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி இருப்பு | | 7,130 |
| **கூட்டுக:** | | |
| வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது | | 800 |
| | | 7,930 |
| **கழிக்க:** | | |
| செலுத்திய காசோலை வசூலாகாதது | | 1,000 |
| வங்கி அறிக்கையின் படி இருப்பு | | 6,930 |

38.

| வ.எண் | விவரம் | வகைப்பாடு |
|---|---|---|
| 1 | முதல் | ஆள்சார் கணக்கு |
| 2 | கட்டடம் | சொத்து கணக்கு |
| 3 | உள் ஏற்றிச்செல் செலவு | பெயரளவு கணக்கு |
| 4 | ரொக்கம் | சொத்து கணக்கு |
| 5 | கழிவு பெற்றது | பெயரளவு கணக்கு |
| 6 | வங்கி | ஆள்சார் கணக்கு |



39. அ) **வன்பொருள் என்றால் என்ன?**

- கணினியின் இயற்கூறுகளை உள்ளடக்கியது அதன் வன்பொருளாகும்.
- முழுமையான கணினி அமைப்பை உருவாக்குவதற்கான உள்ளீட்டு சாதனங்கள் மற்றும் வெளியீட்டு சாதனங்களையும் வன்பொருள் கொண்டிருக்கும்.

ஆ) **மென்பொருள் என்றால் என்ன?**

- வன்பொருள் மற்றும் கணினி அமைப்பின் பயனாளிக்கும் இடையே இடைமுகமாக அமையும் நிரல்களின் தொகுப்பு மென்பொருள் எனக் குறிப்பிடப்படுகிறது.

40. 1) வழக்கமான விற்பனையாக கருத முடியாது
2) முதலின வரவு

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. அ) குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2019 ஜன 1 | ரொக்க க/கு ப<br>ரிஷி முதல் க/கு<br>( ரிஷி ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 50,000 | 50,000 |
| 2 | கொள்முதல் க / கு ப<br>ரொக்க க / கு<br>(ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ) | | 4,000 | 4,000 |
| 3 | கொள்முதல் க/கு ப<br>இரவி க/கு<br>( கடனுக்கு சரக்கு வாங்கியது) | | 10,000 | 10,000 |
| 4 | இரவி க/கு ப<br>ரொக்க க/கு<br>(இரவிக்கு ரொக்கம் செலுத்தியது ) | | 7,000 | 7,000 |
| 5 | எடுப்புகள் க/கு ப<br>ரொக்க க/கு<br>( சொந்தப்பயனுக்கு ரொக்கம் எடுத்தது ) | | 6,000 | 6,000 |
| 6 | வங்கி க/கு ப<br>ரொக்க க/கு<br>( வங்கியில் ரொக்கம் செலுத்தியது ) | | 2,000 | 2,000 |
| 7 | சம்பளம் க/கு ப<br>வங்கி க/கு<br>( சம்பளம் காசோலை மூலம் வழங்கியது ) | | 3,000 | 3,000 |
| 8 | மது க/கு ப<br>விற்பனை க/கு<br>( கடன் விற்பனை) | | 9,000 | 9,000 |



www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | வங்கி க/கு ப<br>வங்கிக் கடன் க/கு<br>( வங்கியிலிருந்து கடன் பெற்றது ) | | 10,000 | 10,000 |
| 10 | ரொக்க க/கு ப<br>பெற்ற கழிவு க/கு<br>( கழிவு ரொக்கம் பெற்றது ) | | 1,000 | 1,000 |

**( அல்லது )**

41. ஆ) <u>கணக்கியல் சமன்பாடு</u>

| வ. எண் | நடவடிக்கைகள் | சொத்துக்கள் | | | = | முதல் ₹. | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரொக்கம் ₹. | வங்கி ₹. | சரக்கிருப்பு ₹. | = | | கடனீந்தோர் ₹. |
| 1 | ரொக்கத்துடன் தொழில்தொடங்கியது | + 40,000 | 0 | 0 | = | + 40,000 | 0 |
| | சமன்பாடு | +40,000 | 0 | 0 | = | + 40,000 | 0 |
| 2 | வங்கியில் செலுத்திய ரொக்கம் | -30,000 | + 30,000 | 0 | = | 0 | 0 |
| | சமன்பாடு | +10,000 | + 30,000 | 0 | = | + 40,000 | 0 |
| 3 | கடனுக்கு சரக்கு வாங்கியது | 0 | 0 | +12,000 | = | 0 | +12,000 |
| | சமன்பாடு | +10,000 | + 30,000 | +12,000 | = | + 40,000 | +12,000 |
| 4 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | + 5,500 | 0 | - 5,500 | = | 0 | 0 |
| | சமன்பாடு | +15,500 | +30,000 | +6,500 | = | + 40,000 | +12,000 |
| 5 | இணைய வங்கி மூலமாக மின்கட்டணம் செலுத்தியது | 0 | - 500 | 0 | = | - 500 | 0 |
| | சமன்பாடு | +15,500 | +29,500 | +6,500 | = | + 39,500 | +12,000 |
| | | 51,500 | | | = | 51,500 | |



42. அ)

ப <u>ஆனந்த் கணக்கு</u> வ

| நாள் | விவரம் | கு. ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு. ப. எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஜூலை15 | ரொக்க க/கு | | 2,000 | 2017 | | | |
| 20 | ரொக்க க/கு ( 3,960 + 40 ) | | 4,000 | ஜூலை 1 | ரொக்க க/கு | | 4,000 |
| 31 | இருப்பு கீ/இ | | 11,000 | 18 | கொள்முதல் க/கு | | 8,000 |
| | | | | 25 | கொள்முதல் க/கு | | 5,000 |
| | | | 17,000 | | | | 17,000 |
| | | | | டிச 1 | இருப்பு கீ/ கொ | | 11,000 |

**( அல்லது )**

42. ஆ) குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

| அடிப்படை | குறிப்பேடு | பேரேடு |
|---|---|---|
| 1. பதிவு செய்தல் | நடவடிக்கை நிகழ்ந்தவுடன் இதில் பதிவு செய்யப்படும் | குறிப்பேடு தயாரித்த பிறகு இதில் எடுத்தெழுதப்படும் |
| 2. பதிவு செய்யும் நிலை | பதிவு செய்வது முதல் நிலையாகும் | இது இரண்டாவது நிலையாகும். |
| 3. பதிவு செய்யும் வரிசை | நடவடிக்கைகள் நிகழ்ந்த நாளின் படி பதிவு செய்யப்படுகிறது | கணக்குகளின் வரிசைப்படி ,பதிவுகள் செய்யப்படுகின்றன. |
| 4. வழிமுறை | ஏடுகளில் பதிவு செய்வதை, குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்கிறோம். | பேரேட்டில் பதிவு செய்வதை, எடுத்தெழுதுதல் என்கிறோம். |
| 5. இருப்பாய்வு தயாரிக்க உதவுதல் | இதனைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்க இயலாது | இருப்பாய்வு தயாரிக்க இது அடிப்படையாகிறது. |
| 6. நிகர நிலை | இதனைக் கொண்டு, ஒரு கணக்கின் நிகர நிலையினை அறிய முடியாது. | இதனைக் கொண்டு, ஒரு கணக்கின் நிகர நிலையினை அறியலாம். |



www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

43. அ) **ராஜு என்பவரின் ஏடுகளில் 31. 3. 2017 ஆம் நாளன்றைய இருப்பாய்வு**

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப. எண் | பற்று இருப்பு ₹. | வரவு இருப்பு ₹. |
|---|---|---|---|---|
| 1 | கை ரொக்கம் | | 5,500 | |
| 2 | பெற்ற தள்ளுபடி | | | 300 |
| 3 | கடனீந்தோர் | | | 15,000 |
| 4 | கட்டடம் | | 50,000 | |
| 5 | தொடக்கச் சரக்கிருப்பு | | 6,000 | |
| 6 | நேரடிச் செலவுகள் | | 5,000 | |
| 7 | வெளித்தூக்கு கூலி | | 3,500 | |
| 8 | முதல் | | | 45,000 |
| 9 | கொள்முதல் | | 49,700 | |
| 10 | விற்பனை | | | 59,400 |
| | மொத்தம் | | 1,19,700 | 1,19,700 |

( அல்லது )

43. ஆ

**31.03.2018 ஆம் நாளுக்குரிய வங்கி சரிகட்டும் பட்டியல்**

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|
| வங்கி அறிக்கையின் படியான வங்கி இருப்பு | | 15,000 |
| **கூட்டுக:** | | |
| வங்கிக் கட்டணம் பதியப்படாதது | 250 | |
| வங்கியால் பற்று செய்யப்பட்ட வட்டி, ரொக்க ஏட்டில் பதியப்படாதது | 500 | |
| காப்பீட்டு முனைமம் பதியப்படாதது | 300 | |
| செலுத்திய காசோலை வரவு வைக்கப்படாதது | 900 | 1,950 |
| | | 16,950 |
| **கழிக்க:** விடுத்த காசோலை முன்னிலைப்படுத்தப்படாதது | | 2,500 |
| ரொக்க ஏட்டின் படி இருப்பு | | 14,450 |



44. அ)

**நாலந்தா புத்தகக் கடையின் ஏடுகளில்**
**கொள்முதல் ஏடு**

| நாள் | விவரம் | உ.வ.இ.எ | பே.ப.எ | தொகை ( ₹ ) விளக்கம் | தொகை ( ₹ ) மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2017 டிச 1 | **உமாதேவி**<br>100 வணிகப் புள்ளியியல் புத்தகங்கள், ஒன்று ₹. 80 வீதம்<br>100 கணக்குப்பதிவியல் புத்தகங்கள், ஒன்று ₹. 150 வீதம் | | | 8,000<br>15,000 | 23,000 |
| 10 | **சுபா**<br>40 பொருளாதாரம் புத்தகங்கள், ஒன்று ₹. 80 வீதம்<br>**கழிக்க** : வியாபார தள்ளுபடி 15% | | | 3,200<br>480 | 2,720 |
| | கொள்முதல் க/கு ப | | | | 25,720 |

**கொள்முதல் திருப்ப ஏடு**

| நாள் | விவரம் | ப.கு எண் | பே.ப.எ | தொகை விளக்கம் ₹. | தொகை மொத்தம் ₹. | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 2017 டிச 15 | **உமாதேவி**<br>10 கணக்குப்பதிவியல் புத்தகங்கள், ஒன்று ₹. 150 வீதம் | | | | 1,500 | சேதமடைந்தது |
| 26 | **சுபா**<br>6 பொருளாதாரம் புத்தகங்கள், ஒன்று ₹. 80 வீதம்<br>**கழிக்க** : வியாபார தள்ளுபடி 15% | | | 480<br>72 | 408 | |
| | கொள்முதல் திருப்ப க/கு வ | | | | 1,908 | |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

## விற்பனை ஏடு

| நாள் | விவரம் | வெ.செ.இ.எ | பே.பு.எ | தொகை (₹) விளக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2017 டிச 7 | ஸ்ரீதேவி<br>240 வணிகப் புள்ளியியல் புத்தகங்கள், ஒன்று ₹. 90 வீதம் | | | 21,600 | |
| | 250 கணக்குப்பதிவியல் புத்தகங்கள், ஒன்று ₹. 170 வீதம் | | | 42,500 | 64,100 |
| 18 | குப்தா<br>200 பொருளாதாரம் புத்தகங்கள், ஒன்று ₹.95 வீதம் | | | | 19,000 |
| | விற்பனை க/கு வ | | | | 83,100 |

( அல்லது )

44. ஆ)

குணால் என்பவரின் ஏடுகளில்

### தனிப்பத்தி ரொக்க ஏடு

ப வ

| நாள் | பெறுதல்கள் | பே.பு. எண் | தொகை ₹. | நாள் | செலுத்தல்கள் | பே.பு.எண் | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2018 | | | | 2018 | | | |
| ஏப் 1 | இருப்பு கீ/கொ | | 11,200 | ஏப் 7 | கூலி க/கு | | 300 |
| 5 | இரமேஷ் க/கு | | 3,000 | 10 | மோகன் க/கு | | 700 |
| 8 | விற்பனை க/கு | | 8,000 | 27 | அறைகலன் க/கு | | 2,000 |
| 30 | பங்காதாயம் க/கு | | 1,200 | 31 | சம்பளம் க/கு | | 2,500 |
| | | | | 30 | இருப்பு கீ / இ | | 17,900 |
| | | | 23,400 | | | | 23,400 |
| மே 1 | இருப்பு கீ/கொ | | 17,900 | | | | |

45. அ) தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

1. தேய்வு மற்றும் உராய்வு
   - சாதாரணமாக புலனாகும் நிலைச் சொத்தை பயன்படுத்தும் போது, அதன் மதிப்பு குறைந்து கொண்டே செல்கிறது. அது தேய்வு மற்றும் உராய்வு என்று அழைக்கப்படுகிறது.
   - தேய்வு ஏற்படும்போது, நிலைச் சொத்தின் மதிப்பு விகிதாச் சாரப்படி குறைகிறது.
2. காலப்போக்கு
   - காலப்போக்கு காரணமாக, ஒரு சில சொத்துகளை பயன்படுத்தினாலும் அல்லது பயன்படுத்தாமல் இருந்தாலும், அவற்றின் பயன்பாட்டு நிலை குறையும்.



3. வழக்கொழிவு
   - நவீன பதிலி சொத்துகளின் வருகையால், சொத்துகளின் மதிப்பு குறைவது வழக்கொழிவு எனப்படும்.
   - புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புதுமையான செயல்முறைகள் காரணமாக, இது ஏற்படுகிறது.

   உதாரணமாக, நவீன கால கணினிகள் பயன்பாட்டாளர்களால் விரும்பப்படுவது.
4. நோக்கத்திற்கு போதுமானதாக இல்லாமல் இருப்பது
   - தேவைக்கான நோக்கத்திற்கு போதுமானதாக இல்லாமல் இருக்கும்போது, அச்சொத்தின் பயன்பாடு நிறுத்தப்படுகிறது.
   - நிறுவனத்தின் திறனை விரிவாக்கம் செய்யும் போது , இச்சொத்துகளின் திறன் போதுமானதாக இல்லாமல் போகலாம்.
5. பராமரிப்பின்மை
   - சொத்துகள் சரிவர பராமரிக்கப்படும் போது, அச்சொத்தின் வாழ்நாள் அதிகரிக்கிறது.
   - சொத்துகள் சரிவர பராமரிக்கப்படவில்லை என்றால், அதிக அளவு தேய்மானத்திற்கான வாய்ப்புகள் உண்டு.
6. அசாதாரணமான காரணிகள்
   - தீ விபத்து, இயற்கைச் சீற்றங்கள் போன்ற அசாதாரண காரணிகளால் ஏற்படக்கூடிய பாதிப்புகளில், நிலைச் சொத்தின் பயன்பாடு குறைந்து, நீக்கப்படும் நிலைக்கும் கொண்டு செல்லலாம்.

( அல்லது )

45. ஆ)

| நடவடிக்கை | வகைகள் |
|---|---|
| (i) தணிக்கைக் கட்டணம் செலுத்தியது ₹. 10,000. | வருவாயினச் செலவு |
| (ii) தொழிலாளர் நலனுக்காகச் செய்த செலவு ₹. 5,000. | வருவாயினச் செலவு |
| (iii) நிறுவன வாகனத்தின் மீதான பராமரிப்புச் செலவு ₹. 2,000. | வருவாயினச் செலவு |
| (iv) பழைய இயந்திரம் வாங்கி பழுதுபார்த்தச் செலவு ₹. 3,000. | முதலினச் செலவு |
| (v) ஆலை வாடகைச் செலுத்தியது ₹. 12,000 | வருவாயினச் செலவு |



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

46. அ)

**கணேஷ் ஏடுகளில் 2017, டிசம்பர் 31 ஆம் ஆண்டிற்கான**

ப **வியாபார மற்றும் இலாப நட்ட கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | | 8,000 | விற்பனை | | 42,000 |
| கொள்முதல் | | 22,000 | | | |
| கொள்முதல் மீதான செலவுகள் | | 2,500 | | | |
| மொத்த இலாபம் கீ/இ ( இலாப நட்ட க/கு மாற்றுவது ) | | 9,500 | | | |
| | | 42,000 | | | 42,000 |
| நிதிச்சார் செலவுகள் | | 3,500 | மொத்த இலாபம் கீ/கொ ( வியாபாரக் கணக்கிலிருந்து மாற்றியது ) | | 9,500 |
| விற்பனை மீதான செலவுகள் | | 1,000 | | | |
| வாராக்கடன் | | 1,200 | நிகர நட்டம் ( முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது ) | | 300 |
| வியாபாரச் செலவுகள் | | 1,200 | | | |
| அளித்த தள்ளுபடி | | 600 | | | |
| கழிவு கொடுத்தது | | 1,100 | | | |
| விற்பனைச் செலவுகள் | | 600 | | | |
| பழுதுபார்ப்புச் செலவுகள் ) | | 600 | | | |
| | | 9,800 | | | 9,800 |

( அல்லது )

46. ஆ) **கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகளில் ஏதேனும் மூன்றினைத் தருக.**

1) **அதிகப்படியான நிருவுதல் செலவு**
   - அவ்வப்போது கிடைக்கக் கூடிய புதிய பதிப்புகள் கொண்டு, கணினியின் வன்பொருள் மாற்றப்படுவதன் தேவையும் மற்றும் மென்பொருளை மேம்படுத்துவதன் அவசியமும் ஏற்படுகின்றது.
   - எனவே, அதிகப்படியான நிருவுதல் செலவு ஏற்படுகிறது.

2) **பயிற்சி அளித்தலின் செலவுகள்**
   - கணினிமயக் கணக்கியல் முறையை, பயனுள்ளதாகவும், திறனுடனும் பயன்படுத்துவதை உறுதி செய்ய, வன்பொருளின் மற்றும் மென்பொருளின் புதிய பதிப்புகளை அறிமுகப்படுத்த வேண்டும்.
   - இவை சிறப்பு பயிற்சியின் தேவையினை, ஏற்படுத்துகிறது.
   - ஆகவே, பணியாளர்களின் பயிற்சிக்காக செலவு செய்யப்படுகின்றது.

3) **வேலையின்மையென அச்சம்**
   - கணினிமயக் கணக்கியல் முறையை அறிமுகப்படுத்துவதனால், பணியாளார்கள் தனது வேலை பறிபோகலாம், என பாதுகாப்பற்றதாக கருதி, கணினி சார்ந்த வேலைகளில் ஆர்வம் காட்டுவதில்லை.

4) **பணியில் இடையூறு**
   - கணினிமயக் கணக்கியல் முறையை அறிமுகப்படுத்தும் சமயத்தில், தற்போதுள்ள கணக்கியல் செயல்பாடுகளும் மற்றும் பிறவேலைகளும் தடங்கலாகின்றன.
   - இது, பணிச்சூழலில் சில மாற்றங்களை விளைவிக்கிறது.

5) **உடல்நலத்திற்கு இடையூறு**
   - கணினியை அதிகப்படியாக உபயோகிப்பதனால் கண்ணில் அழுத்தம், தசை பாதிப்பு, முதுகுவலி மற்றும் பல உடல்நலக் கேடுகள் ஏற்படலாம்.

47. அ)

**குமார் அவர்களின் 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய**

ப **வியாபார இலாப நட்ட கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | | 1,500 | விற்பனை | | 20,100 |
| கொள்முதல் | | 14,500 | இறுதி சரக்கிருப்பு | | 3,900 |
| நிலக்கரி மற்றும் எரிபொருள் | | 600 | | | |
| உள் தூக்கு கூலி | 750 | | | | |
| கழிக்க :முன் கூட்டி செலுத்தியது | 250 | 500 | | | |
| மொத்த இலாபம் கீ/இ | | 6,900 | | | |
| | | 24,000 | | | 24,000 |
| விளம்பரம் | | 500 | மொத்த இலாபம்கீ/கொ | | 6,900 |
| வெளித்தூக்கு கூலி | | 400 | பெற்ற வாடகை | 2,500 | |
| நிகர இலாபம் | | 8,400 | கழிக்க : முன் கூட்டி பெற்றது | 100 | 2,400 |
| | | 9,300 | | | 9,300 |



B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

குமார் அவர்களின் 2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | தொகை ₹. | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| முதல் | 5,000 | | வங்கி | | 1,200 |
| கூட்டுக :நிகர இலாபம் | 8,400 | 13,400 | அறைகலன் | | 8,000 |
| | | | கடனாளிகள் | | 2,250 |
| கடனீந்தோர் | | 2,000 | முன் கூட்டி செலுத்திய உள்தூக்கு கூலி | | 250 |
| முன்கூட்டி பெற்ற வாடகை | | 100 | | | |
| செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | | 400 | பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு | | 300 |
| | | | இறுதி சரக்கிருப்பு | | 3,900 |
| | | 15,900 | | | 15.900 |

( அல்லது )

47. ஆ)

ப இயந்திர கணக்கு வ

| நாள் | விவரம் | தொகை ₹. | நாள் | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| 1.4.2010 | வங்கி க/கு<br>4,50,000 + 50,000= 5,00,000 | 5,00,000 | 31.03.2011<br>31.03.2011 | தேய்மானம் க/கு<br>இருப்பு கீ/இ | 50,000<br>4,50,000 |
| | | 5,00,000 | | | 5,00,000 |
| 1.4.2011 | இருப்பு கீ/கொ | 4,50,000 | 31.3. 2012<br>31.3. 2012 | தேய்மானம் க/கு<br>இருப்பு கீ/இ | 50,000<br>4,00,000 |
| | | 85,100 | | | 4,50,000 |
| 1.4.2012 | இருப்பு கீ/கொ<br>இலாபம் நட்ட க/கு ( விற்பனையில் இலாபம் ) | 4,00,000<br>35,000 | 31.3 2013<br>30.3. 2013 | தேய்மானம் க/கு<br>வங்கி க/கு | 50,000<br>3,85,000 |
| | | 4,35,000 | | | 4,35,000 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net